Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞூ (1889) ஆனி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதி ஞூ வைகாசி மீ ௨௰௨ உ வெள்ளிக்கிழமை (12 June. 1964) [இல-௧௦]

## சேக்கிழாரும் அவர் தந்த செந்தமிழ்க் காப்பியமும்

—0—

திரு. ச. குமாரகுலசிங்கம் B. A. (Hons)

சேக்கிழார் வரலாற்றை அறிவதற்கு அவருக்கு ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் இயற்றியதிருத்தொண்டர் புராணத்திலுள்ள சேக்கிழார் புராணம் மிக உதவி புரிகின்றது சேக்கிழார் தொண்டைநாட்டிலே, குன்றத்தூரிலே வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் பிறந்தவர். தாய், தந்தையர் இவருக்குச் சூட்டிய பெயர் 'அருண்மொழித் தேவர்' என்பதே. இவர் சைவநெறி தழுவிய வாழ்க்கையோடு இளமையில் ஆய கலைகள் அறுபத்திநான்கினையும் நன்கு கற்றனர். இவர் கல்வித் திறனைப்பற்றிச் சுவையான ஒரு கதை உண்டு:—

இவர் தந்தையார் அரச சபையில் ஓர் உத்தியோகத்திலிருந்தார். ஒருநாள் அரசன் அவரையும் ஏனையோரையும் பார்த்து, "மலையிற் பெரிது; பூமியிற் பெரிது; கடலிற் பெரிது", எதெது என்று கேட்டு அடுத்தநாள் அதற்கு விடை சொல்ல வேண்டுமென்று விடுத்தான். வீட்டிற்கு வந்து சிந்தனையில் ஆழ்ந்து கவலைப்பட்ட தந்தையிடமிருந்து காரணத்தை அறிந்த இளஞ் சேக்கிழார் மூன்று குறட்பாக்களால் விடை சொல்லித் தந்தையைத் தேற்றினர். அக் குறட்பாக்களாவன:—

"நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

"பயன் தூக்கார் செய்த வுதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

என்பனவாம். இது ஒரு கர்ணபரம்பரைக் கதையாகும் சேக்கிழாரது கல்வித் திறமையைக் கேள்வியுற்ற அநபாயச்சோழன் அவரை வரவழைத்து, அவருக்கு 'உத்தமச் சோழப் பல்லவன்' என்ற பட்டங்கொடுத்துத் தம் முதன் மந்திரியாக அமர்த்தினன். (இதைப்போலவே இளம் மணிவாசகரின் கல்வித் திறனைக் கண்ட அரிமர்த்தன பாண்டியனும் அவருக்குத் தென்னவன் பிரமராயன் என்ற பட்டம் வழங்கித் தன் முதன் மந்திரியாக்கினன்' என்பதும் கவனிக்கத் தக்கது.)

சேக்கிழார் பிரதம மந்திரியாயிருக்குங் காலை, அரசன் சமணப் பெருங் காப்பியமாகிய சீவகசிந்தாமணிமீது காட்டிய பற்றைக் கண்டு, அவன் மனதைச் சைவத்தின் மீது திருப்பும் முகமாக அவனுக்குச் சைவ நாயன்மார் சரிதைகளின் பெருமைகளை எடுத்துரைத்தார். அரசன் அவற்றைக் காவிய வடிவில் அமைக்குமாறு வேண்டினன். அரசன் ஆதரவுடன் சேக்கிழார் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானை வணங்கினர். தில்லை நடராசரும் கருணைகூர்ந்து 'உலகெலாம்' என்று அடியை அசரீரியில் வழங்கினர். சேக்கிழார் 'உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்' என்ற முதல் வரியுடைய பாடலுடன் ஆரம்பித்து, 4253 செய்யுள்களில் பெரியபுராணத்தை இயற்றியருளினர். நூலரங்கேற்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அரசன் சேக்கிழாருக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற சிறப்புப் பெயர் சூட்டி, வேறு பல வகைகளிலும் கௌரவித்தான். சேக்கிழார்மனமோ துறவறத்தை நாடியது அரசன் இவரது தம்பியாராகிய பாலறாவாயரை வரவழைத்துத் தம் மந்திரியாக அமர்த்திக் கொண்டான். சேக்கிழார் திருத்தில்லையில் சீரிய சிவனடியார் நிலையிலிருந்து ஈற்றில் இறைவன் திருப்பாத நீழலடைந்தனர்

சேக்கிழார் சாம்ராஜ்யச் சோழ மன்னருள் ஒருவனாகிய அநபாயன் காலத்தவர். மன்னன்மீது மிகுந்த விசுவாசம் கொண்ட சேக்கிழார் தமது நூலில் பல விடங்களில் அநபாயன் பெருமையைக் கூறியுள்ளார். இந்த அநபாயன் கி. பி. 1123—1148 ஆகிய காலத்தில் ஆட்சி செய்த

தொடர்ச்சி 2ம் பக்கம்

### நற்சிந்தனை
(தாலாட்டு)

ஏமக் கடல்கடந்து
காட்சிபெற்ற நல்லடியார்
சேம நிதியே சிவனே நீ
கண்வளராய்.

### சைவப் பயிர் வளர்த்தகொண்டல்

"எள்ளுந் திறத்துப் பரசமய
ரேறு வருக. தேறுதலில்
எங்கள் உணர்வின்
கணுமதுரித்
தினிக்கு மிருங் கோற்
றேன் வருக;
தேள்ளும் புலத்தர் பெறுகாம
தேனு வருக; வருகந்தர்
சிந்தா மணியைப்
பொருட் படுத்தாச்
செல்வச் சிந்தா மணிவருக;
உள்ளு மவருக் கெய்ப்
பிடைவைப்
போத்துள் ளொழுமொள்
ளொளி வருக!
உலவா தமைந்த சிவபோகங்
கொள்ளுஞ் சைவப் பயிர்
வளர்க்கும்
கோண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமாளிகைக்
குன்றைக்
கோமான் வருக வருகவே.

* * *

—சேக்கிழார்
பிள்ளைத் தமிழ்.

## சைவ சமூகமும் குருமார் கடமையும்

[8—3—64-ல் உரும்பராய் கற்பகவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சங்கத்தின் 14-வது ஆண்டு மகாநாட்டில், யாழ்/வண்-நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பிரதம ஆசிரியர் பிரம்மஸ்ரீ. க வை. ஆத்மநாதசர்மா அவர்கள் பேசியவற்றின் சாரம்.]

(தொடர்ச்சி-2)

சிறந்த பண்பாடு உடையவர் குருமார். பண்பாடு உண்டாவதற்குப் பிறவியும் ஓரளவுக்கு உதவியாகுமேயன்றிச் சாதிமாத்திரம் பண்பாட்டை ஆக்கிவிடாது. சிறந்த பண்பாடு அமைவதற்குச் சூழ்நிலை பெரிதும் உதவுகின்றது. சூழ்நிலையை (surroundings) என ஆங்கிலத்தில் கூறுவர். ஒருவன் எத்தகைய மக்களின் மத்தியில் வளர்க்கப்படுகிறானோ — வாழ்கிறானோ அதுவே அவனுக்குரிய சூழ்நிலையாகிறது.

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றும் திரிகரணங்கள் எனப்படும். மனம் - நினைக்கிறது, வாய் - பேசுகிறது, காயம் - சரீரம், செயல்புரிகிறது. முதன் முதலில் ஒரு தொழிற்பாடு தோன்றுவதற்கு இவை ஒன்றோடொன்று தொடர்புடையனவாகின்றன. பழக்கப்பட்டபின் மனம் நினையாமலே வாய் ஒன்றைச் சொல்லிவிடும். மிக நீண்ட பழக்கத்தின்பின் மனமும் வாயும் இயங்காமலே சரீரம் ஒன்றைச் செய்துவிடும். இந்தப் "பழக்கம்" என்பது இருக்கிறதே, இது ஒருவனை உயர்வுடையவனாகவோ, அன்றித் தாழ்வுடையவனாகவோ ஆக்கிவிடுகிறது.

அதனாலேயே, ஒருவன் சிறந்த பண்புடையவன் ஆவதற்கு சஜ்ஜன சங்கம் - நல்லோர் கூட்டுறவு இன்றியமையாதது ஆகின்றது. பண்புடைமை - கல்வி, கேள்வி கோயிற் பழக்கம் என்னும் மூன்றினாலும் அமைய வேண்டும்.

கல்வி — கற்பதெல்லாம் சிறந்த கல்வியாகமாட்டாது. கற்கவேண்டியதைக் கற்பதே கல்வியாகும்.

"கற்க கசடறக்
கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்றார் நாயனார். கற்க வேண்டியவற்றை ஐயந் திரிபு விபரீதம் அறக் கற்க. கற்றதை அறிக. அறிந்ததை உணர்க. உணர்ந்த வழி வாழ்ந்து நிற்க என்பதே விரிவான விளக்கம்.

அடுத்தது கேள்வி - ஒருவன் தன் வாழ் நாளிலே தனக்கு வேண்டிய கல்வி முழுவதையும் பூரணமாகக் கற்க வாய்ப்புவராது. கல்வி பெரிய கடல். ஆயுட்காலமோ குறுகியது. கிடைக்கும் சாதனங்களோ மிகச்சில. அதனால் கற்றறிந்த பெரியார்கள் பேசும்போது அமைதியாக இருந்து கேட்பதினாலேயே சிறந்த அறிவைப் பெறலாம். அதுவே கேள்வி ஞானமாகும்.

மூன்றாவதாக உள்ளது கோயிற்பழக்கம். ஆலயம் என்று கட்டப்பட்டன மாத்திரம் கோயில்கள் என்று இங்கு கருத்தாகாது. நடமாடுங்கோயில்களும் இருக்கின்றன. நடமாடுங் கோயில்களாக உள்ளவர்களே உண்மை ஞானிகள். உண்மை ஞானிகள் எப்படி வாழ்ந்தார்கள் - வாழுகிறார்கள் என்பதைக்கண்டு, அறிந்து, நாமும் அப்படி வாழப்பழகுவதே கோயிற்பழக்கம் என்பதன் சிறந்த கருத்தாகும். அதுவே நல்லோர் கூட்டுறவு. இதனையே சூழ்நிலை எனக் குறிப்பிட்டோம்.

இனி குருமார் யார் எனச் சிந்திப்போம்.

1. குருத்துவம் வகிப்பவர் குருமார்.
2. தமக்கென வாழாது பிறர்க்குரியாளராய் வாழ்பவர் குருமார்.
3. அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்னும் ஐவருமே ஐங்குரவர் என்பது பெருவாயின் முள்ளியாரது கருத்து.

சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை எனப் படிமுறையாகவுள்ள மூன்று தீட்சைகளையும் பெற்று நாலாவதாகிய ஆசாரியத்துவம் பெற்றவரே குருத்துவம் பெற்றவராவர்.

சமயதீட்சை என்பது சமயப்பிரவேசம். நான் சைவன்-சைவ சமயத்தவன் என்று சொல்லிக்கொள்ளுந் தகுதி சமய தீட்சை பெற்றவர்களுக்கே அமையும். அவர்களே முதற்படியான சரியா மார்க்கத்தை அனுட்டித்து

தொடர்ச்சி 2-ம் பக்கம்

## நேருஜி மறைந்தாலும் விண்ணுலகிலிருந்து உலக சமாதானத்துக்கு உழைப்பார்

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில நேருஜி அவர்கள் மறைவு பற்றி நடைபெற்ற அநுதாபக் கூட்டத்தில் ஷ ஆதீன குருமகாசன்னிதானம் அவர்கள் நேருஜி அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவரது தன்னலமற்ற தேசத் தொண்டையும், நற்குண நற்பண்புகளையும் விரிவாக எடுத்துக் கூறினார்கள். மேலும் நேருஜீ அவர்கள் காணக் கூடிய இம்மை வாழ்விற்குரிய ஸ்தூல உடலை மண்ணுலகில் விட்டுப் பிரிந்து, சொப்பனத்தில் தொழிற்படுகின்ற சூக்கும சரீரம் என்ற அம்மை வாழ்விற்குரிய ஆவிஉடலோடு விண்ணுலகிலிருந்து உலக சமாதானத்திற்காக இன்னும் பல சேவைகள் செய்துவருவாரென்றும், அதற்குரிய மேலான நிலையை அவர் அடைய எல்லோரும் பிரார்த்தனை செய்யவேண்டும் என்றும் கூறி அருளினார்கள். அதன்படி 2 நிமிஷங்கள் மௌனமாயிருந்து பிரார்த்தனை செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஹூ வைகாசி மீ ௩௦ உ வெள்ளிக்கிழமை

## இலங்கையின் சிறுபான்மையினர்

ஓர் அரசனுடைய கடமைகள் எவையென்பதைச் சேக்கிழார் நாயனர் தமது பெருங் காப்பியமாகிய திருத்தொண்டர் புராணத்தில் பின்வருமாறு கூறுகின்ருர்.

மாநிலங்கா வலனுவான்
மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு
தன்னுற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற்
கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த்
தறங்காப்பா னல்லனே.

ஓர் அரசனனவன் தனது நாட்டில், வாழும் உயிர்களைக் காவல் செய்யும் பொழுது அவர்களுக்கு இடையூறு தன்னலும், தன் பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வராலும், பிற உயிர்களாலும் வராமல் காக்கின்றவனுவான். அங்ஙனம் நாட்டை ஆள்கின்றவனே மாநிலங்காவலன் என்ற சிறந்த நாமத்துக்குரிமையுடையவன் எனச் சேக்கிழார் நாயனர் கூறுகின்ருர். மநுநீதிகண்ட சோழன், சிபி, அசோகன் போன்ற அரசர்கள் இக்குறிக்கோள்களைப் பின்பற்றி நாட்டை ஆண்டார்கள். இக்காலம் சில நாடுகள்தவிர உலகம் முழுவதும் முடியரசு தவிர்க்கப்பட்டுக் குடியரசு பொதுவரசு நடைபெறுங் காலம். அங்ஙனமாயினும் சேக்கிழார் நாயனர் கூறுங் குறிக்கோள்கள் எவ்வித அரசும் அநுட்டிக்க வேண்டியவையே என்பது அறிஞர் துணிபு.

இவ்வித அரச தர்மங்களை நாடுகள் அநுட்டித்தாற்ருன் மக்கள் சமாதானமாகவும் இன்பமாகவும் வாழ முடியும் என்னும் நோக்கத்துடன் ஐ. நா. ஸ்தாபன சங்கம் மனித உரிமை சாஸனத்தைத் தனது சட்டஙகளில் ஒரு முக்கிய உறுப்பாகச் சேர்த்திருக்கின்றது. அண்மையில ஐ. நா. ஸ்தாபன இலங்கைக் கிளைச் சங்கத்தின் ஆதரவில் மனித உரிமை சம்பந்தமான ஒரு கருத்தரங்கம கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்றது. குறித்த கருத்தரங்கில் பங்குபற்றிய பெரியார்களுளொருவராகிய திரு வில்மட் பெரேரா அவர்கள் நாட்டின் பொருளாதாரம் பெருகவும், மக்களிடையே ஒற்றுமை நிலவவும் சிறுபான்மை மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தனர், சனநாயக ஆட்சி மக்களின் சம்மதத்துடன் மக்களுக்காக ஆக்கப்பெற்ற ஆட்சி முறையாகுமெனவும் அவ்வித ஆட்சிமுறையில் பெரும்பான்மை வகுப்புக்குரிய மக்களும் சிறுபான்மை வகுப்புக்குரிய மக்களும் சம உரிமைகளை அநுபவிக்க வசதிகளை அமைப்பதே தர்மமெனவும் அவர் கூறினர். துரதிர்ஷ்டமாக எங்கள் நாட்டில் நடைபெறும் ஆட்சி முறையில் சிறுபான்மையினருக்குத் தர்ம நீதிப்படி வழங்கப்பட வேண்டிய உரிமைகள் வழங்கப்படவில்லை. ஒரு பககத்தில் தமிழ் மக்களுடைய வாக்குரிமை குடியுரிமை கல்வியுரிமை மறுக்கப்பட்டுவருகின்றன. இன்னெருபக்கத்தில் பண்டைக் காலந் தொடக்கம் இந்த நாட்டையே தாய்நாடாகக் கொண்டு வாழுகின்றவர்களும் ஆங்கிலேயருடைய ஆட்சியின் கீழ் நாட்டின் விடுதலைக்காகப் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து போராடியவர்களுமாகிய தமிழ் மக்களுடைய மொழியுரிமை அமைதியான வாழ்க்கையுரிமை மறுக்கப்படுகின்றன. தனிச்சிங்களச் சட்டத்தை இயற்றியதன் பேருகச் சிங்கள மொழியைத் தமிழ் பேசும் மக்களிடையே திணிப்பதற்குத் தீவிரமான முயற்சிகளை அரசாங்கம் கையாளுகின்றது. சிங்கள மொழித் தேர்ச்சி பெருத தமிழ் உத்தியோகத்தர் பலர் தங்கள் பதவிகளிலிருந்தும் விலக்கப்பட்டனர். இன்னும் விலக்கப்படவிருக்கின்றனர்.

தென்வியாட்நாமில் மனித உரிமை மீறப்பட்ட பொழுது ஐ. நாவில் இலங்கை முன்னுகநின்று மறுப்புத் தெரிவித்தது. பாக்கீஸ்தானிலிருந்து பௌத்தர்கள் துரத்தப்பட்டபொழுது எங்கள் பிரதமர் அச்செயலைப்பற்றிப் பாரத அரசாங்கத்திடமும் பாக்கிஸ்தானிய அரசாங்கத்திடமும் விளக்கங்கோரியுள்ளார். ஆனல் சொந்த நாட்டில் சிறுபான்மை மக்கள் அநுபவிக்கும் கஷ்டங்களை எங்கள் பிரதமர் மறந்துவிடுகின்றனர். மனிதனுக்கு மனிதன் மரியாதை கொடுக்கவேண்டுமென்பதே ஐ. நா. ஸ்தாபனத்தின் மனித உரிமை சாஸனத்தின் அடிப்படைக்கொள்கை. முன்னர்க் கூறிய கருத்தரங்கில் இக்கொள்கையை வற்புறுத்தியே யாவரும் உரையாற்றினர். இலங்கையில் மனித உரிமை சாஸனக் கொள்கை அநுட்டிக்கப்படுவதாக எங்கள் பிரதமரும் குறித்த கருத்தரங்கத்திற்குச் செய்தி அனுப்பியதாகக் கூறப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குவது தர்மமாகும். நாட்டில் செல்வம் பெருகவும், கலாச்சாரம் விருத்தியடையவும், மக்கள் சமாதானமாக வாழவும் ... செயல் பெருந்துணை புரியும்.

## சேக்கிழாரும் அவர்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் குலோத்துங்கனே என்று திரு சி. கே. சுப்பிரமணிய முதலியார் போன்ருேர் கூறியுள்ளனர். இவர் சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்க தேவருக்குப் பிந்தியவர். கம்பருக்கு முந்தியவர்.

பெரியபுராண ஆசிரியரின் வரலாற்றைப் பற்றி இதுகாறும் கூறினேம். பெரிய புராணத்தின் சிறப்பியல்புகளைச் சிறிது ஆராய்வோம். தமிழில் காணப்படும் காவியங்களுள் பலவற்றினைப்போல்ப் பெரிய புராணம் வடமொழித் தழுவல் அல்ல. தமிழ் நாட்டில் வாழ்ந்த பெரியார்களைப்பற்றி, சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருத்தொண்டர் தொகையையும், நம்பியாண்டார் நம்பியாரின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் ஆதாரமாக வைத்துத் தன் புலமைத் திறனையும் பத்தி வைராக்கியத்தையும் வெளிப்படுத்தினர் சேக்கிழார். சீவக சிந்தாமணி ஈடுபாட்டிலிருந்து அரசன மனதை மாற்றவே பெரியபுராணம் இயற்றப்பட்டது என்பது சமணர் சீவக சிந்தாமணியை உயர்த்துவதற்காகப் புனைந்தகட்டுக்கதையாகும். ஆனல் சேக்கிழார் சிந்தாமணியைக் கற்றறிந்தவர் என்று எண்ண இடமுண்டு. இரண்டு நூல்களிலும் 13 சிறு பிரிவுகள் உள. இரு ஆசிரியர்களும் கையாண்ட உவமைகள் முதலியனவற்றிலும ஒற்றுமைகளைக் காணலாம்.

பல்வகை நிலைகளிலிருந்து இறைவன் கருணைக்குப் பாத்திரங்களாகி முத்தியடைந்த சைவப் பெரியார்களது வாழ்க்கைகளைக் கூறும காவியத்தில் பத்திச் சுவை செறிந்து கிடப்பது இயற்கையே. மகாவித்துவான் மீனட்சிசுந்தரம்பிள்ளையவர்களும் தமது சேக்கிழார் பிள்ளைத் தமிழில் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப்பாடிய கவிவலவ' என்று பாராட்டியுள்ளார். சிலர் பெரிய புராணம் பல தனிச் சரிதங்களடஙகிய சாதாரண காவியம் என்று வாதிப்பர். ஆனல் சுந்தரமூர்த்தி நாயனர் சரிதத்தைக் கூறும் பொழுதே மற்றய நாயன்மாரின சரிதங்கள் கூறப்பட்டமையாலும், பெருங் காப்பிய இலக்கணத்திற்கமைந்த அம்சங்கள் பல பெரிய புராணத்தில்காணப்படுகின்றமையினலும், பெரிய புராணம் ஒரு பெருங் காப்பியமே என்று இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. இவ்விஷயத்தையும, பெரிய புராணததின் இலக்கிய நயங்களையும் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் 'சேக்கிழார்' என்னும தமது நூலில் நன்கு விளக்கியுள்ளார்.

திரு. அ. ச. ஞானசம்பந்தம அவர்கள் 'உவமை நயம்' என்ற தலைப்புடன் தென்னிந்திய சஞ்சிகையொன்றில் வந்த தனது இலக்கிய விமர்சனக் கட்டுரையில் சேக்கிழார் திண்ணனர் (கண்ணப்பர்) காளத்திநாதரை அணைத்து நிற்கும் நிலையை விளக்கக் கையாண்ட உவமை ஒன்றே அவர் கவித்திறமையின் உயர்வைக் காட்டும் என்று குறிப்பிடுகின்ருர். அவ்வுவமை பின்வருமாறு:- "வங்கினைப் பற்றிப்போகா வல்லுடும்பு என்ன நீங்கான்" என்பதே. இங்கே திண்ணனர் இறைவனைப் பற்றிக் கொண்டு விடமாட்டேன் என்று இருந்த ஒப்பற்ற செயலை, கல்வியறிவில்லாதவர்களும், காட்டுவாசிகளுமான அவரது வேட்டுவ நண்பன் தன்னறிவுக்கேற்றபாணியிலே வர்ணிக்கின்ருன். இங்கே பாத்திரங்களின் பண்பை விளக்குகின்ற உவமையே கையாளப்பட்டிருக்கின்றது. கல்வி அறிவில்லாத வேடன் ஒருவன்தான் அன்றடம் காண்கின்ற உடும்பை உவமப் பொருளாகக் கூறுவதுதான் பொருத்தமேதவிர வேறு எத்தகைய உயர்ந்த உவமையையும் கையாளுதல் ஆகாது.

பன்னிரண்டாந்திருமுறையாக வைத்துப் போற்றப்படும் பெரியபுராணம் சைவக்களின் ஆன்மஈடேற்றத்திற் வழிகாட்டி நூலாக இயற்றப்பட்ட காலம் துவங்கித் திகழ்ந்து வந்திருக்கின்றது, இப்போது பெரிய புராணத்தை ஆறுமுக நாவலர் அமைத்த வசன வடிவிலும் சைவர்கள் படித்துப் பயன் பெறக் கூடியதாக இருக்கின்றது. சேக்கிழார் பெருமான் அல்லது சேக்கிழார் சுவாமிகள் என்று நாம ஏத்தும் பெரிய புராண ஆசிரியரின் வரலாற்றையும் ஒவ்வொரு சைவப்பிள்ளையும் அறிந்திருத்தல் அவசியம்,

---

## சைவத் தலைமை ஆசிரியரை நியமிக்குக

சைவப் பிள்ளைகள் கூடுதலாகக் கல்வி கற்கும் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் முறையே அதிபர்களாகவும் தலைமை யாசிரியர்களாகவும் நியமனம பெறுபவர் சைவ சமயத்தவராக இருக்கவேண்டுமென்பது வித்தியாபகுதியினரின் தீர்மானமாகும். யாழ்ப்பாணம். சைவ பரிபாலன சபையும், சைவாசிரியர் சங்கமும் இத்தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் வண்ணம் வித்தியா பகுதியினருக்கு மனுச்செய்திருக்கின்றன. அஙஙனம் கேட்டுள்ள போதிலும் உரிய முறையில் தலைமையாசிரியர் நியமனம் நடைபெறவில்லை யெனத் தெரிகின்றது. சைவப்பிள்ளைகள் அதிகமாகக் கற்றுவரும் அனேக பாடசாலைகளில் இக்குறை இருந்துகொண்டே வருகிறது. எனவே இக்குறைபாட்டை நீக்கி உதவுதல் அரசாங்கத்தின் நீதியான கடமையாகும்.

நல்லூர் சாதன பாடசாலையில் சைவப்பிள்ளைகளே பெரும்பாலாகக் கற்றுவருகின்றனர். இதுவரை காலமும் சைவத்தலைமையாசிரியர் இல்லாமையால் அவர்களுடைய சமயவளர்ச்சி பாதிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே இனிமேல் மேற்படி வித்தியாசாலைக்கு ஒரு புதிய தலைமையாசிரியர் நியமிக்கப்படும்பொழுது அவர் ஒரு சைவனுகவிருக்கவேண்டுமென வடமாநில சைவ இளைஞர் மாமன்றம் வித்தியா பகுதியைக் கேட்டுள்ளது.

## சைவ சமூகமும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியிற் சிவலோக பதவியைப் பெறுபவராவர்.

விசேட தீட்சை பெற்றுக் கிரியாமார்க்கத்தை அனுட்டிப்பவர்களாய் மெய்யன்பு கொண்டு உடையவர் பூசை எனப்படும் சிவபூசையை முறைப்படி செய்பவர்களே இறுதியில் சிவசாமீப்பிய பதவியைப் பெறுவார்கள்.

நிர்வாண தீட்சை என்பது மூன்ருவதாகிய உயர்வுடைய தீட்சையாகும். நிர்வாணம் என்பது ஆன்மாவைப்பற்றிய மலங்கள் அற்ற நிலை. இவ்வாறு குருவினுல் தீட்சிக்கப்பட்டு மலங்கள் அற்றுத் தூய்மையடைந்தவர்களே யோக மார்க்கத்தை அனுட்டிப்பவராய் ஞான நூல்களைக் கற்குந் தரமுடையவராவர், இவர்களே தம் அனுபூதியில் இறைவனைக்கண்டு இன்புறுவர். இவர்கள் இறுதியில் இறைவனது சாரூப்பிய பதவியைப் பெறுவர்.

நாலாவதாக உள்ளதே ஞான நிலை, அதனை அடைந்தவர்களே மெய்ஞ்ஞானிகள், அவர்களே ஆசாரியத்துவம் - குருத்துவம் பெற்றவராவர், அவர்களே தம்மையும் பிறரையும் ஈடேற்றவல்லவர்கள், அவர்களே ஈற்றில் இறைவனேடு இரண்டறக்கலத்தலாகிய சாயுச்சிய முத்தியைப் பெறுவார்கள்.

குருமார் கடமையாவது:- மெய்ஞ்ஞானிகளாகிய குருமார் உலகில் வாழ்வது தமக்காகவன்று. அகில உலக ஜீவராசிகளும் ஈடேற வேண்டும் என்ற பெருநோக்கங் கொண்டு அல்லும் பகலும் அனவரதமும் இறைவனை வேண்டுபவராவர். இக்கருத்தை வலியுறுத்தவே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகையில்,

"முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கடியேன்" எனக் குறிப்பிட்டார்போலும்.

இறைவழிபாட்டின் இறுதியில் அவர் திருச்சந்நிதியில் நின்று செய்யும் வேண்டுகோளாவது:-

"சுவஸ்தி ப்ரஜாப்ய:
பரிபாலயந்தாம்
நியாய்யேன மார்க்கேண
மஹீம் மஹீம்சா:
கோப்ராம் ஹணேப்ய:
சுபம் பவது நித்யம்
லோகா: ஸமஸ்தா:
ஸுகினோ பவந்து-"

என்பதாகும். அதன் பொருளாவது:-

"அகில உலகுக்குத் அம்மையும் அப்பனுமாக உள்ள

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைப்பாறிய அதிபருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகவும், உப அதிபராகவும் அதிபராகவும் 36 வருடகாலம் சேவை செய்து சென்றவாரம் இளைப்பாறிய திரு. சி. சபாரத்தினம் அவர்களுக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் ஒரு பிரியா விடைக்கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை மாலை நடத்தினர்கள். தற்காலிக அதிபர் திரு. என். சபாரத்தினம் தலைமைவகிக்க விழா நன்கு நடைபெற்றது. கல்லூரியின் பல்வேறு கழகங்களின் சார்பில் பல மாணவர்களும் ஆசிரியர்களும் இளைப்பாறிய அதிபர் அவர்களின் தொண்டுகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்கள். தற்காலிக அதிபர் திரு என் சபாரத்தினம் அவர்கள் பேசும்போது . இளைப்பாறிய அதிபரின் சேவைகளைப் பின்பற்றுவது கடினம் என்றும் சேவை மனப்பான்மை அவருக்கே உரியது என்றும் கூறினர். விழாமுடிவில் திரு. ஸி. சபாரத்தினம் அவர்கள் உளம் கனிந்து நன்றிகூறி தாம்வருங் காலத்திலும் இந்துக்கல்லூரிக்குத் தமமுடைய தொண்டுகளைச் செய்வதற்குத் தயாராகவிருப்பதாகவுங் கூறினர் முடிவில் அவரை மேளவாத்தியசகிதம் மாணவர்களும் ஆசிரியர்களும் ஊர்வலமாக அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்ற காட்சி உருககயாக இருந்தது.

## மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனப் பட்டமளிப்பு விழா

### ஈழத்துச் சைவப்பெரியார்கள் கௌரவிக்கப்பட்டனர்

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் 24-5-64 தொடக்கம் 28 5-64 வரை திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை சம்பந்தமான உற்சவம் சிறப்பாக நடத்தப்பெற்றது. 24-5-64ல் அன்று மடாலய விநாயகர் வழிபாடும், 25-5-64 ல் அன்று மடாலய முருகக்கடவுள் வழிபாடும், 26-5-64 ல் அன்று திருஞானசம்பந்த சுவாமிகள் திருவவதாரத்தை நினைவூட்டும் விழாவாக திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைச் தங்கச் சப்பரத்தில் ஆவணிமூல வீதிவழி எழுந்தருளச்செய்தலும், 27-5-64ல் அன்று திருமுலைப்பால் அருந்துதலை நினைவூட்டி திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரை ஆவணிமூல வீதிவழி எழுந்தருளச் செய்தலும், 28 5-64 திருஞானசம்பந்த சுவாமிகள் அறுபத்துமூன்று நாயன்மார்களுடன் மடாலயத்துக்கு எழுந்தருளி திருக்கண் ஆராதனைகள் முடிந்தபின் திருமணக்காட்சியுடன் தங்கச் சிவிகையில் ஆவணிமூல வீதிவழி எழுந்தருளலும் அதன் பின்பு மடாலயத்தில் விசேட அபிஷே காராதனைகளும் ஞானசம்பந்தப் பெருமான் சோதியில் கலக்தும் ஐதீகக் காடசியும், மாகேசுர பூசையும், திருக்கலியாண மண்டபத்திலிருந்து திருஞானசம்பந்த சுவாமிகள் வெள்ளிக் கோரத்தில் ஆவணிமூல நிதி வழி எழுந்தருளுதலும் நடைபெற்றன. மதுரை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ. குருமகா சந்நிதானத்தின் தலைமையில் திருமுருக கிருபானந்தவாரி அவர்கள் 'திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்' என்னும் பொருள்பற்றியும், திரு, வே இராமநாதன் செட்டியார் அவர்கள் 'திருநாவுக்கரசுநாயனர்' என்னும் பொருள்பற்றிசும், புலவர்மணி திரு. தி, கி. யுந்தரமூர்த்தியவர்கள் 'பரவையார் பரமன்தூது' என்னும் பொருள்பற்றியும் விரிவுரைகள் நடைபெற்றன. இலங்கை ஈழநாடு பத்திராதிபர் திரு கே.பி. ஹரன் அவர்கள் தேவாரப்பாடல். பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினர்.

28-6-64 ல் அன்று இரவு 2 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ. குருமகாசன்னிதானம் அவர்கள் திருக்கொலு வீற்றிருந்து பக்தர்கள் அனைவருக்கும் அருளாசிபுரிந்தார்கள். திருக்கொலுமுகத்தில் பல பெரியோர்களுக்குப் பட்டங்கள் வழங்கினர்கள்.

**பட்டம் பெற்றவர்கள்:**

இலங்கையில் உள்ளவர்களில் ஸ்ரீமதி. சிவானந்தா தம்பையா "சிவநெறிச் செம்மணி" கொழும்பு தம்பையா முதலியார் சத்திர அதிபரும் பொதுச் சைவப்பணித் தொண்டரும்.

ஸ்ரீமதி,தங்கம்மா நடராசா "சித்தாந்த நன்மணி" சைவத் தொண்டு ஆற்றிவந்த காலஞ் சென்ற என். நடராசாவின் மனைவியார் காரைநகர்.

ஸ்ரீ. அருணசலம் விஸ்வநாதன் "சைவசித்தாந்தசரபம்" விவேகானந்தசபை, சைவபரிபாலனசபைப் பிரதம ஆட்சியாளராகக் கடமை செய்தவர். இளைப்பாறிய வடமாகாண உதவி அரசாங்க அதிபர்,

வித்துவான் இ. சி. சோதிநாதன் கொழும்பு "சித்தாந்தச் செம்மணி"

திரு ஆ. கந்தையா எம் ஏ "சிவநெறித் தோண்டர்" கொழும்பு இந்துக்கல்லூரி ஆசிரியர் பொதுச்சைவத்தொணடர்.

சைவப்புலவர் தேசிகமணி கா. அருணசலம் மட்டக்களப்பு "சைவமெய்ப்போதகர்"

ஸ்ரீ. எஸ். சரவணமுத்து கொழும்பு 'சிவநெறிச்செம்மல்" விவேகானந்த சபை, கதிர்காமத்தொண்டர்சபை ஆட்சிக்குழுவினர். ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம். திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை இயக்கங்களில் முன்னின்றுஉழைத்து வருபவர்.

ஸ்ரீ. பி, ஸ்ரீஸ்கந்தராசா "சைவசிகாமணி" சுப்பிரீங் கோட்டு நீதியரசரும், பிரபல சைவத்தொண்டரும் கொழும்பு.

ஸ்ரீ. எம். வைரவப்பிள்ளை "செந்தமிழ் மாமணி" கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர், விவேகானநதசபை, திருக்கேதீஸ்வர ஆலயச்சபை அங்கத்தவர்.

டாக்டர் டி. நல்லைநாதன் "சிவபக்தசிகாமணி" நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் தர்மகரித்தா, விவேகானந்த சபை, தமிழ்ச்சங்கம் ஆதிய சைவசமயச் சங்கங்களின் உபதலைவர்,

திரு. டி. முத்துச்சாமிப் பிள்ளை "சிவநெறிக்காவலர்" வழக்கறிஞர், சைவபரிபாலன சபைத்தலைவர் யாழ்ப்பாணம்.

திரு. எம். மயில்வாகனம் யாழ்ப்பாணம், "சித்தாந்த சிரோன்மணி" யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையின் சமயப்பிரசாரகர்.

திரு. பொன். கருணாகரர் தெல்லிப்பழை யாழ்ப்பாணம் மதுரை ஆதீன வித்துவான் [illegible].

---

### சேக்கிழார் குருபூசை

—:—

சேக்கிழார் நாயனர் குருபூசை யாழ். சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் வழமைபோலச் சிறப்பாக நடைபெறும்.

—0—

### பண்டிதப் பட்டதாரிகளின் தேநீர் விருந்து

மல்லாகம் பண்டித கழகத்தில் பயின்று பட்டம்பெற்றோரின் தேநீர்விருந்துபசாரத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய கழக நிர்வாக ஆசிரியர் பண்டிதர் ச. பொன்னுத்துரையவர்கள் அக்கழகமாணவரின் சிறந்த தேர்ச்சியை மிக மிகப்பாராட்டிப்பேசினர்கள் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கப் பண்டித பரீட்சைக்கு அக்கழகத்திலிருந்து தோற்றிய பன்னிருவரில் எழுவர் பூரண சித்தியும். இருவர் நூனசித்தியும் பெற்றது அவ்வகுப்பு மாணவர்களின் திறமைக்கு ஒரு எடுத்துக் காட்டெனக் கூறினர். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழைப் பேணிப் பாதுகாப்பதற்கு அத்தகைய வகுப்புக்களின் இன்றியமையாமையை விளக்கி விட்டு தமிழ்ப் பண்டிதர்களின் உத்தியோக விடயமாகவும் சம்பள ஏற்ற விடயமாகவும் ஆசிரிய சங்கங்களும், ஆரியதிராவிட பாஷா அபிவிருத்திச் சங்கமும் சிரத்தை காட்டவேண்டுமெனவும் குறிப்பிட்டார்கள். அக்கழக வகுப்புக்களிற் கல்விபயிற்றிய ஆசிரியர்களின் திறமையையும் அவர் மிகுதியாகப் பாராட்டினர்,

கழகப் பேராசிரியர்கள்சார்பில் பண்டிதர் திரு. க. நாகலிங்கம், வித்துவான் திரு. ச கந்தசாமி ஆகியவர்கள்பேசுகையில் முன்னைவர் மாணவர்கள் பட்டம்பெற்றுவிட்டோமென்பதால் படிப்பைத் தொடராது விடவொண்ணுதெனவும், பின்னவர்பிறர்க்குறுதி கூறுதலும் கல்வியை மேலும் கற்றலுமே சித்தியடைந்த மாணவர்கடனென்றும் குறிப்பிட்டார். சமூகமளித்திருந்த பிரமுகர்கள் சார்பில் நியாயதுரந்தரர் திரு. நமசிவப்பிரகாசமவர்களும் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்களும் வடமொழியாசிரியர் திரு வ நாகரத்தினம் அவர்களும் பேசினர்கள். திரு. நமசிவப்பிரகாசம் அவர்கள் பேசுகையில் அக்கழகம் செய்துவரும் தொண்டைத் தாம் வியந்து பாராட்டுவதாகக் குறிப்பிட்டுத் தமது பாராட்டுதலுக்கு அறிகுறியாக மாதாந்தம் பத்துரூபா அக்கழகத்திற்கு உபகரிப்பதாகவும் குறிப்பிட்டார்.

---

# தமிழ்ச் சங்க வரலாறு

**பண்டிதவித்துவான் சைவப்புலவர் திரு.இ திருநாவுக்கரசு**
தலைமையாசிரியர் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை

[தமிழ்ச்சங்க வரலாறு குறித்து அறியத்தரும் செய்திகள் இப்பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும். இச்செய்திகள் சரித்திர ஆதாரங்களோடு உள்ளவை; ஆதலால் இக்கட்டுரையிற் குறிப்பிடப்படும் விடயங்களைத் தமிழ் அன்பர்கள் கூர்ந்து நோக்கி வளம் உடையதாக அச்சங்கத்தை வளர்க்க முற்படுவார்களாக.]

முற்றொடர்—2

இச்சங்கத்தார் பரீட்சைக் காலமாக வருடந்தோறும்வரும் ஆவணித்திங்களையே குறிப்பிட்டுள்ளனர். நாவலர் பாடசாலைப் புதிய கட்டடத்துப் பிரவேசம் செய்ததும் கீலக வருடம் ஆவணிமாதமேயாம். ஆவணித்திங்கள் மங்கல நிறைவுடைய மாதமென்பது அன்னுர் கருத்துப்போலும். அந்நியதியைப் பின்னர்க் கடைப்பிடித்தாராயினும் முதற்பரீக்ஷை சிறந்ததோர் ஒரையில் நடாத்தப்பெறுதல் வேண்டுமென்ற குறிக்கோளினல் 1899-ம் ஆண்டுக்குச் சரியான விளம்பி வருடம் தைத் திங்களில் பரீக்ஷை நடாத்தப் பெற்றது.

இச்சங்கத்தார் நடாத்திட இரண்டாவது பரீட்சை கி. பி. 1899 க்குச் சரியான விகாரி வருடம் ஆவணித்திங்கள் 12-ம் திகதி முதலாக நடாத்தப்பெற்றமை சாதனங்களால் அறியக்கிடக்கின்றது. முதலாவது தைத்திங்கட் பரீட்சையில் பாலபண்டித தராதரப் பரீட்சைக்கு ஐந்து மாணவர்கள் தோற்றினர். விகாரி ஆவணித் திங்களிலோ பாலபண்டித பரீட்சை, பாரதிபரீட்சை ஆகிய முதலிரு பரீட்சைகள் நடாத்தப் பெற்றன. இப்பரீட்சையில் முதற் பரீட்சைக்கு ஐந்து மாணவர்களும், இரண்டாம் பரீட்சைக்கு மூன்று மாணவர்களும் தோற்றினர். அவருள் முதற் பரீட்சையில் மூவரும் இரண்டாம் பரீட்சையில் இருவரும் சித்திபெற்றனர்.

சித்திபெற்றோர் பெயர்கள் வருமாறு:—

முதற்பரீட்சை (பாலபண்டிதர்).

(1) இணுவில் அ. க. சபாபதிப்பிள்ளை.

(2) இருபாலை முத்தையா சோமசுந்தரம்.

(3) ஷெயூர் கணபதிப்பிள்ளை நமசிவாயம்.

இரண்டாவது பரீட்சை
(பாரதி பரீக்ஷை)

(1) நல்லூர் செல்லமுத்து தம்பையர் அல்லது தம்பிஐயர்.

(2) ஷெயூர்கந்தையா சபாபதி.

பாலபண்டிதபரீட்சையில் முதல்வராகச் சித்திபெற்றவர் தணிகைப் புராண உரையாசிரியரும், இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தாபகருமாகிய இணுவை மகாவித்துவான் அம்பிகைபாக உபாத்தியாயர் கனிஷ்ட புத்திரரும், எனக்கு இயற்றமிழுணர்த்திய நல்லாசிரியரும் ஆவார். இச்சங்கத்தார் பரீட்சையில் பின்னர் அவர் தம்பியாகிய திரு. A. K. இளையதம்பியவர்கள் சித்திபெற்றமையும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குத் தமிழ்ப்பேராசிரியராகஇருந்ததும் அறியக்கிடக்கின்றது.

—தொடரும்

---

இவ்வாரம் 14-6-64 — 20-6-64

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

புதுமுயற்சியில் வெற்றி நிச்சயம். உடல்நிலைதிருந்தவேண்டும். அதிகவேலை. எற்ற நிவர்த்திப்பு. இனத்தவரின் தொல்லை என்பன உண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

தோல்விகளைச் சந்திக்கவேண்டியிருக்கும். உடல்நிலை திருப்தியாயிருக்காது. விபத்துக்கள்பற்றி எச்சரிக்கை. வசை பாடிகளால் தொல்லை உண்டாம்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

வயிற்றுக் கோளாறுகளுண்டாகலாம். மார்பு வலியும் நிம்மதியீனமும் உண்டாம். சிலஉறவினரின் கண்டனங்களுக் குள்ளாகவேண்டிவரும். செலவுகள் பெருகும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

சுகவீனங்களுக்கு இடமுண்டு. இனத்தவர் மூலமான தொல்லைகள், பணநன்மை, நிலபுலவரும்படிஉண்டாம். இரகசிய எதிரிகள் பற்றி எச்சரிக்கை.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

நல்லவாரம் எல்லா முயற்சிகளிலும் வெற்றிபெறுவீர். குடும்ப அமைதியும் புகழும் நிச்சயம் இனத்தவர் மிக உதவுவர்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தொழில் பொறுப்புக்களுக்கு உகந்தவாரம். பணஇலாபம் நிச்சயம். உடல்நிலைஊறுபடும். குடும்ப சுகத்திற்குமிடமுண்டு.

**துலாம்,** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

பணமளவில் ஓரளவு நல்லவாரம். வண்டிகளால் இலாபம்நிச்சயம். குடும்பஅமைதி நிலவும். நிம்மதியிருக்காது. சுகவீனமும் உண்டாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

குடும்பவட்டத்தில் சச்சரவுஉண்டாம். குழந்தைகளின் உடல்நிலை பாதிக்கப்படும். வயிற்றுக்கோளாறுகளுக்கிடமுண்டு. பணமளவில் நல்லவாரம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

முதல்நாள் எச்சரிக்கையோடு கழியவேண்டும். மிகுதி நாட்கள் பணத்துக்கும் தொழில்முயற்சிகளுக்கும் எற்றவை. குடும்பத்தில் அமைதியில்லாது.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

புதுமுயற்சிகளில்வெற்றிபெறுவீர். ஞாயிறுமாலை, திங்கள், செவ்வாய் எச்சரிக்கையோடு கழியவேண்டும். மிகுதிநாட்கள் சாதகமானவை. எதிரிகளுக்கிடையூறும் உமக்குப் புகழும் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

உடல்நிலை போதுவதாயிருக்காது. இரகசிய எதிரிகளால் இடையூறுண்டாம். குடும்பநிலையுமநிறைவற்றிருக்கும்- புதன்மாலை வியாழன் வெள்ளி எச்சரிக்கை.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

உடல்நிலை போதுவதாகாது. இரத்தத்தில் அழுக்கு, குடும்பகலவரம் உண்டாம். ஆனல் எதிரிகளுக்கு இடையூறுநிச்சயம். நிலபுலங்களால் இலாபமும் உண்டாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

சாவகச்சேரி
மாவட்டகோட்டில்
சாவகச்சேரி தெற்கு
(போட்டர்) டேவிற் சின்னையா
—வழக்காளி

இல, M,B. 2652

எதிராக

டீயூர் நாகன்சின்னப்பொடியன்
—எதிராளி.

சாவகச்சேரி மாவட்டக்கோட்டு 2652-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்க்காணுமாதனவிடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1964 ஞு ஆடிமீ 1உ புதன்கிழமை காலை பத்து மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 4574/50சதமும் 9-4-63 தொடக்கம் 1-8-63 வரையும் ரூபா 3500-க்கு 12 வீத வட்டியும் பின் கூட்டிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 227-20 சதமும். இதில் கொடுபட்ட ரூபா 100 கழித்து மிகுதி.

ஆதன இடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டத் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரி இறை, "மஞ்சல் மரத்தடியும் பெருங்குளவயலும்" நெற்பரப்பு 18 குளி 6½, இதில் வடகுப்பக்கமாக அரைவாசிக்கு நெ. பர, 9 குளி 3 3/8 நெ, பர ஒன்பதும் குளி மூன்றுடன் எட்டில் மூன்றுகளும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் கட்டையன் பெண் சேதிக்குமுரிய ஆதனம், வடக்கு சின்னப்பொடியன் பெண் ஆச்சிக்குட்டிக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம், மேற்கு மூத்தர் பெண் பசுபதிக்கும் ஆறுமுகம் முருகேசுவுக்கும் உரிய ஆதனம், தெற்கு மூத்து மூர்த்தி பெண் அருளம்மாவுக்கும் பிள்ளைகளுக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட் சேர்ந்த நிலம் பயிரடங்கலும் பதிவு யாழ்ப்பாணம் ௬ 305/147.

மூ. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்.

சாவகச்சேரி, 11-6-64.
M 69 12-6-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அனலைதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் லிமிற்ரெட்
வழக்காளி,

இல M B 5090

எதிராக

அனலைதீவு 1. வைத்தியநாதர் சுப்பிரமணியமும் பெண்
2. திலகவதியும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் M B 5090ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை, 1964 ம் ஞு ஆடிமீ 11 உ சனிக்கிழமை முற்பகல் 11-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 988-76 சதமும் கோட்டுச் செலவு ரூபா 185-05 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதிஅனலைதீவு கோயிற்பற்று அனலைதீவு இறை 'வெள்ளிடை' பர நில இல. 8 5/8 இதில் மேற்குப் பக்கமாக பர நில இலா 4 (காலும்) தென்னைமரங்களும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு ஆறுமுகம் பெண் பாக்கியத்துக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு சாம்பசிவம் பெண் சொர்ணம்மாவின் ஆதனம். தெற்கு இதன் மிகுதிஆதனம். N. பொன்னையாவுக்கும் பெண் கமலாம்பிகைக்கும் உரியது. இதடங்கலும் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும், வழி வாய்க்கால் பாவிப்புரித்தும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் C 282/39 ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ ஜெகநாதன்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
16 A அம்மன் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
M. 66 12-6-64.

## சைவ சமூகமும்...

2-ம் பக்கத் தொடர்ச்சி

பரம்பொருளே, தேவரீரது திருவருளால், சகல பிரசைகளுக்கும் மங்களமாகிய சுக வாழ்வு உண்டாவதாக. மன்னர்கள் நீதி நெறிப்படி பூமியைப் புரப்பாராக. பசுக்களுக்கும் பிராமணர்களுக்கும் எப்போதும் சுபம் அமைக. சகல சராசரங்களும் சுகம் அடைவார்களாக.

இப்படியாக இறைவன் திருமுன்பு நின்று தினமும் செய்யும் வேண்டுகோள் ஒரு போதும் வீண்போகாது "நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்றார் ஔவை மூதாட்டியார். குருமார் செய்துவரும் சிறந்த கடமை இதுவாகும்.

நீதி நெறிப்படி நாட்டைப் பரிபாலிக்கும் மன்னனை மதித்தல், கல்வி கற்பித்த ஆசிரியரை மறவாதிருத்தல், பெற்ற தாயைப் பேணுதல், தந்தையை வணங்குதல், தமக்கு முன் பிறந்த தமையனை வழிபடுதல் இவ்வைந்தும் குருமார் தங்கடமையாகக் கொண்டு ஏனையோருக்கும் வழிகாட்ட வேண்டியவராவர். ———

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டிலே,

1. கரவெட்டி வதிரி, அம்பலவாணர் தம்பையா கைம் பெண் பொன்னம்மா
2. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ரோட்டு இல. 37A, சின்னத்தம்பி ஆறுமுகம் இராசரத்தினம் —வழக்காளிகள்.

இல. M.B. 4715

வண்ணார்பண்ணை மேற்கு,
(சோனகதெரு.
காதி அபூபக்கர் வீதி,
இல. 40/1.)

1. எஸ். கபீபு முகம்மது அகமத்மூகியதீன்.
2. சுல்தான் அப்துல்காதர் கபீபு முகம்மது கைம் பெண் சுல்தான் மொகிதீன் காச்சியா
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4715-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்காணும் ஒரு துண்டுக்காணி 1964 – ம்ஆ ஜூலை மீ 18 உ சனிக்கிழமை (18-7-1964) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1000/-, இன்னும் ரூபா 1000 – க்கு 1-1-60 தொடக்கம் 17-1-63 வரை 5% வட்டியும் கூடிய தொகைக்கு 17 - 1 - 63 தொடக்கம் இறுபடும்வரை 5% வட்டியும்,

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தெல மேற்கிறை "புங்கடி" நில. பர. (1) ஒன்று குளி (15 2/3) பதினைந்தொடு மூன்றிலிரண்டும் வீடும் பயிர்வகைகளிலும் இதற்கெல்லை கிழக்கு முகம்மது உசன் தம்பி பெண் மூத்துமுகம்மது முகம்மது காச்சியாவுக்குப் மறுபேருககுமுரிய ஆதனம், வடக்கு மூகிதீன் சாகிபு கைம்பெண் பீபியன் ஆதனம், மேற்கு மண்ரோட்டு, தெற்கு ஒழுங்கை. இதடங்கலில் சொரியலாய் குளி 15, 134/144. இது 1-ம் எதிரியின் 98/144 பாகத்தையும் உள்ளடக்கியது.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கொண்டாவில் மேற்கு.
கொண்டாவில், 9-6-64.
M. 68 12-6-64.

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூ[illegible] அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14

## COMMISSION SALE
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்ற வழக்கு
இல. 6194

வழக்காளி:
1. வல்லிபுரம் சிவசிதம்பரம்
2. வல்லிபுரம் மகள் சிவசோதிமலர். இவர்கள் இருவரும் பராயமற்றவர்கள், பராமரிப்புககாரன் ஆள்வாப் பிள்ளை நிலயினார் துன்னாலை தெற்கு.

எதிராக

எதிரிகள்:
1. பருத்தித்துறை, விநாயகமூர்த்தி மயில்வாகனம்,
2. இருபாலை, வேலாயுதம் பிள்ளை சிவகுருநாதர், தற்காலம் கல்ஓயா விஸ்தரிப்பு நிலயம் அம்பாறை (Gal-Oya Development Board, Amparai)
3. ஷை பெண் இராசநாயகி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும். இதன்கீழ் காணும் ஆதனங்கள் 1964-ம்ஆ ஆடிமீ 18உ (18-7-64) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன இடாப்பு:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயில்பற்று. பருத்தித்துறை மழவாய குறிச்சியிறை "கோம்பைக்கலட்டி" நில. பர. 14⅜. இதுவும் பருத்தித்துறை சிங்கபாகு தேவன் குறிச்சியிறை "தினைக்கலட்டி" நில. பர, 9⅜, இதுவும் தற்காலம் ஒரே துண்டாயிருககின்றன, இதற்கு உலாந்தா மேஸ்தர் கதிர்காமர் கணபதிப்பிள்ளையால் 1932-ம்ஆ பங்குனிமீ 25 ம்உ 5764-ம் இலக்கத்தில் வித்தாரிக்கப்பட்ட படத்தின்படி நில. பர. 25 குளி 3 26/32. இதில் குறித்த படத்தில் 3-ம் நம்பர்ததுண்டுக்கு நில. பர, 4 குளி 18/32-ம். இதற்கு்பட்ட புதிதாய்க் கட்டிய கலவீடு, குசினி கட்டிடம் பனைகள் தென்னைகள் கிணறு இன்னும் இதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு குறித்த படத்தில் கண்ட 4-ம் நம்பர் துண்டு, வடக்கு ஒழுங்கை, மேற்கு குறித்த படத்தில் கண்ட 2-ம் நம்பர் துண்டு. தெற்கு வயிரவிப்பிள்ளை சினியருககும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைககுட்பட்டவை முழுவதும்.

2. ஷை யிறை வென்றிபாகு தேவன் குறிச்சியிறை 'சல்லிமணல்' நில. பர. 32 குளி 17/8. இதில் நில. பர 6 குளி 4 3/8, இதில் வடக்குப்புறமாக மூன்றிலிரண்டு பங்குககு நில, பர. 4 குளி 2 11/12, கல்வீடு, கிணறு தென்னைகள், பனைகள், வேம்புகளும். எல்லை கிழக்கு நீக்கிலான் சகாயனுககும், மறுபேருக்குமுடைய ஆதனம் வடக்கு நாகலிங்க முதலியார் வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு சங்கரியன் பெண் சவினம்மாவின் உரிமைக்காரருககுடைய ஆதனம். இவ்வெலைக்குட்பட்டவை முழுவதும்.

3. தெற்குப்பக்கமாக மூன்றிலொரு பங்குக்கு நில. பர. 2 குளி 1 11/24 - ம். புதிதாய்க் கட்டப்பட்ட கல்வீடு, தென்னைகளும். எல்லை கிழக்கு நீககிலான் சகாயனுக்குரியவாதனம், வடக்கு மேற்கூறிய 2-ம்ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு மரியாம்பிலலை பாவிலுப்பிள்ளைககும் மறுபேருககுமுடைய ஆதனம், இவ்வெல்லைக் குட்பட்டவைகளில் என்னால் கட்டப்பட்ட கல்வீடு நீந்தமாகவும் நிலம் தென்னைகளில் சொரியலாய் எட்டிலேழு பங்கும்,

1. தீர்வைத்தொகை; 28,545-00
2. வட்டி 17,000-க்கு 26-11-58 லிருந்து 29-4-1964 வரை 5 வீதப்படி 680-00
3. வட்டி 1-ககும் 2-க்கும் அதாவது ரூபா 28545-ககும் ரூபா 680-கும் 29-5-59 லிருந்து 29-4-64வரைக்கும் 5 வீதப்படி 7183-35

வரவேணடிய மொத்த தொகை 29-4-64-ல 36408-35
வட்டியில் கழிவு தொகை 750-00
மீதித்தொகை வரவேண்டியது 29-4-64 ல் 35658-35
29-4-64 தொடக்க 29-6-64 வரைககும் 5 வீதப்படி வட்டி ரூபா 297-15

கா, முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales& Valuer.
சந்நிதிவேல்,
பருத்தித்துறை. 15-5-64.
M 65 12-6-64

## அடைவு நகை
## ஏல விற்பனவு

காங்கேசன்துறையில் (யாழ்-காங்கேசன்துறை வீதி) அடைவு பிடிக்கும் திரு. செல்லையா செல்லத்துரை அவர்களிடம் 1960 ம் ஞு பெப்ரவரி மீ 1 உ தொடக்கம் 1962 ம் ஞு ஏப்பிரல் 30 உ வரை வைத்த அடைவுகள் மீட்கப்படாதவற்றை 1964 ஞு யூன் மீ 25 உ (25-6-64) வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
643, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம், 2-6-64.
M. 62 5, 12-6-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண
மாவட்டநீதிமன்றத்தில்
வழக்கு இல M B 5416.
புத்தூர் கிழக்கு புத்தூர்
சின்னப்பொடியன் கந்தன்
—வழக்காளி

எதிராக

வாதரவத்தை புத்தூர் கிழக்கு
புத்தூர் சின்னத்தம்பி தம்பிப்
பிள்ளை எதிராளி,

யாழ்ப்பாணம் மாவட்டநீதிமன்றத்தில M B 5416ம் இலக்கவழக்கில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஏழு துண்டுக்காணிகளை 1964ம்ஆ ஆடி மாதம் 25ம் திகதி (25-7-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகருள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

திர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 795 ம் இன்னும் ரூபா 500க்கும்18-2-63தொடக்கம் 25-10-63 வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியு பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரைககும் 100 க்கு 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 169 சதம் 87½ இதில் ரூபா 100 உம் ரூபா 75 உம் கொடுபட்டது.

காணிகள் விபரம்

(1) வடமாகாணம்யாழ்ப்பாண டிஸ்திறிக வலிகாமம் கிழக்கு புத்தூர்கோவிற்பற்று புத்தூர் வடக்கிறை 'சகாட்டையடி' பர நில இலா 98 எல்லை கிழக்கு வாரித்தம்பி முருகருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு முடிக்குரிய நிலம். மேற்கு ஆறுமுகம் சின்னத்தம்பிககும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு ஆறுமுகம் சின்னத்தம்பிக்கும்பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலில் சொரியலாய் 25 பரப்பில் ஆறில் ஒருபங்கில் சொரியலாய் 2⅜ பரப்பு,

2. ஷை இறை 'வாகப்பிருலை' பர நில இலா 65, எல்லை கிழக்கு காகர் வேலுப்பிளளையினுதனம். வடக்கும் மேற்கும் அடிப்பாதை. தெற்கு ஆறுமுகம் சின்னத்தம்பியினுதனம், இதில் சொரியலாய் 1/6 பங்கு

3. ஷை இறை வாதரவத்தை வடமேற்கு கட்டு பர நில இலா 38 எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு சொல்லப்பட்ட இரண்டாம் ஆதனம். மேற்கு ஆடு, மாடுப்பாதை. தெற்கு வல்லிபுரம் பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இதில் சொரியலாய் 1/6 பங்கு

4. ஷை இறை 'சூரக்கன்பத்தை' அளவு ஏக்கர் ஒன்று றூட் ஒன்று பேர்ச்செஸ் முப்பத்தொன்று. எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு ஆறுமுகம் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு முடிக்குரியஆதனம். இதில் சொரியலாய் 12 பரப்பில் சொரியலாய் 1/6 பங்கு.

5. ஷை இறை 'தோறணைக் கந்து' அளவு ஏக்கர் 19, றூட் 3 பேச்செர்ஸ் 23 எல்லை கிழக்கு சின்னத்தம்பி இராமலிங்கத்தினுதனம். வடக்கு சரவணை சின்னத்தம்பியினுதலம். மேற்கு அடிப்பாதை. தெற்கு வேலுப்பிள்ளை சுப்பருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் 3 ஏக்கரில் சொரியலாய் 1/6 பங்கு.

6. ஷை இறை வாதறவத்தை கிழக்கு பர நில இலா 20. இதில் தெற்குப் பக்கமாக பிரிக்கப்பட்ட பர. நில இல 10 தில் மேற்குப் பக்கமாக பரநில இல ஆறு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சுப்பருக்கும் மறுபேருககுமுரிய ஆதனம், வடக்கு சின்னத்தம்பி கைம்பெண் பாறுவதியினுதனம் மேற்கு கதிரேசர் தம்புவினுதனம். தெற்கு கதிரேசர் தம்புவுககும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதில் சொரியலாய் 1/3 பங்கு

7 ஷை இறை "வில்லூத்து" பர நில. இல 26½ எல்லைகிழக்கு ஒழுங்கை. வடககு நமசிவாயம் கைம்பெண் இளையபிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு அப்பா, கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு கந்தையா கனகசபைக்கும் மறுபேருக்குமுரியஆதனம். இதில்சொரியலாய் 1/8பங்கு

தா, செல்லையா,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்
இல: 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
M 58 12-6-64

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 12-6-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org